இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 25.07.2026

# விஜய் போலீசின் அராஜகம்!

நீட் தேர்வு முறைகேட்டைக் கண்டித்து தற்கொலை செய்து கொண்ட அரியலூர் அனிதாவை தனது தங்கச்சி என்றும், 'நீட் தேர்வை எதிர்ப்பேன்' என்றும் வேஷம் போட்ட விஜய் ஆட்சிக்கு வந்ததும் நீட் தேர்வை எதிர்த்துப் போராடும் மாணவர்களின் கையையும் காலையும் உடைக்கிறார். டெல்லியில் போராடும் மாணவர்களை ஒடுக்குவதில் அங்குள்ள போலீசார் எத்தகைய அராஜகத்தில் ஈடுபடுகிறார்களோ, அதே அராஜகத்தையும் அட்டூழியத்தையும் இங்குள்ள விஜய் ஆட்சி போலீசும் செய்கிறது.

லத்தி லைசென்ஸை போலீசுக்குக் கொடுத்துவிட்டு, தான் நடித்த படத்தை ரசிப்பதில் மூழ்கி இருக்கிறார் விஜய். 'ரோம் பற்றி எரியும் போது பிடில் பிடித்தான் மன்னன்' என்பதற்கு இணையானது முதலமைச்சர் விஜய்யின் நடவடிக்கைகள்.

★ சென்னை எழும்பூர் ராஜரத்தினம் ஸ்டேடியம் அருகில் இரண்டு நாட்களாக போராட்டத்தை நடத்தி வருகிறார்கள் மாணவர்கள். இந்திய மாணவர் சங்கம், டி.ஒய்.எஃப்.ஐ. அமைப்பினர் இதனை நடத்தினர். முதல் நாள் நூற்றுக்கணக்கானவர்களைக் கைது செய்து எட்டுக்கும் மேற்பட்ட பிரிவுகளில் வழக்குப் போட்டு உள்ளே தள்ளியது விஜய் போலீஸ். மறுநாள் மாணவர்கள் வர மாட்டார்கள் என்று நினைத்தார்கள். மறுநாளும் மாணவர்கள் வந்ததும் கோபம் ஆன போலீசார், அவர்களை அராஜக வழியில் வெளியேற்றினார்கள். டெல்லி போலீசைக் கண்டித்துதான் இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது. அதனைக் கூட விஜய் ஆட்சி அனுமதிக்கவில்லை.

மாணவர்களை குண்டுக்கட்டாகப் பிடித்து தரதரவென இழுத்துச் சென்றது போலீஸ். மாணவிகள் என்று கூட பார்க்காமல் இழுத்ததால் அவர்கள் ஆடைகள் கிழிந்தது. வலுக்கட்டாயமாக பேருந்தில் ஏற்றினார்கள். பல மாணவிகளுக்கு உடலில் காயம் ஏற்பட்டது. சிலருக்கு எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது.

**'தமிழ்நாட்டில் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளதா?' என்று போலீசைப் பார்த்து மாணவிகள் கேள்வி எழுப்பினார்கள். "நாலு மாணவர்கள் மருத்துவமனையில் இருக்கிறார்கள். மாணவர்கள் கையில் போலீஸார் கடித்துள்ளார்கள். இது அராஜகம் அல்லவா?" என்று ஒரு மாணவி கேள்வி கேட்டார். 'நாலு பேர் கூடவே கூடாதா? சும்மா நடந்து வந்தாலே கைது செய்கிறீர்கள். கூட்டம் கூடுவதற்கு முன்பே ஏன் கைது செய்கிறீர்கள்?' என்ற கேள்விக்கும் காவல் துறை அதிகாரிகளால் பதில் சொல்ல முடியவில்லை.**

★ சென்னை திருவொற்றியூரில் உள்ள அரசு கல்லூரியில் மாணவர்கள் போராட்டம் நடத்தினர். அறவழியில் போராடிய மாணவர்களை, கல்லூரிக்குள் புகுந்து கைது செய்ய முயன்றுள்ளது. இதற்கு சக மாணவ மாணவிகள் எதிர்ப்புத் தெரிவித்து, போலீசாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இருப்பினும் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களை, சமூக விரோதிகள் போல் அடித்து, தரதரவென இழுத்துச் சென்று காவல்துறை கைது செய்தது. இந்திய மாணவர் சங்கத்தைச் சேர்ந்தவர்களை அடையாளம் கண்டு கைது செய்துள்ளது போலீஸ்.

★ **மதுரை தமுக்கம் தமிழன்னை சிலை அருகே இந்திய மாணவர் சங்கம், இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் போராட்டம் நடத்தினார்கள். அவர்களை குண்டுக்கட்டாக தூக்கிச் சென்று கைது செய்தது காவல் துறை. சாலை மறியல் செய்தவர்களை தடியடி நடத்தி கலைத்தது போலீஸ். மாணவிகளை இழுத்துச் சென்று வேனில் ஏற்றினார்கள். பின்னர் மாணவர்களைத் தேடி கல்லூரிக்கும் விடுதிக்கும் சென்றது போலீஸ். மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தில் படித்து வரும் இந்திய மாணவர் சங்க மாணவர் தலைவர்களை கைது செய்ய பத்துக்கும் மேற்பட்ட போலீஸார் நுழைந்துள்ளனர். வகுப்பறைக்குள் சீருடையுடன் சென்று கைது செய்துள்ளார்கள்.**

★ **ஒரு மாணவரை அசிங்கமான வார்த்தையால் திட்டுகிறார் திருவொற்றியூர் போலீஸ் அதிகாரி.**

★ **மாணவியின் கையைப் பிடித்து, இழுத்து அராஜகம் செய்கிறார் ஆண் போலீஸ் அதிகாரி.**

★ **சென்னையில் உள்ள கல்லூரி வாசல்கள் அனைத்திலும் காவல் துறை குவிக்கப்பட்டுள்ளது.**

★ **சென்னை மெரினா கடற்கரை போலீஸ் கட்டுப்பாட்டில் உள்ளது. கடற்ரைக்கு வரும் பொதுமக்கள் தீவிர விசாரணைக்குப் பிறகே அனுமதிக்கப்பட்டார்கள். சர்வீஸ் லைன் அனைத்தும் மூடிவைக்கப்பட்டது.**

★ **போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களின் பேண்ட்டை பிடித்து இழுத்து இருக்கிறது போலீஸ்.**

★ **கல்லூரி வளாகத்திற்குள் சென்று அங்கிருந்த மாணவர்களை மல்லுக்கட்டி இழுத்து வந்திருக்கிறது. மாணவர்களின் சட்டையைக் கிழிக்கிறது போலீஸ்.**

★ **டெல்லியில் போலீஸ் சீருடை இல்லாதவர்கள், கையில் லத்தியுடன் வந்து மாணவர்களை அடிக்கிறார்கள். இங்கும் அது தொடங்கி இருக்கிறது. சீருடையில் பெயர் பேட்ஜ் எடுத்துவிட்டு வருகிறது போலீஸ்.**

**- இவை அனைத்தும் போலீஸ் ராஜ்யம் நடக்கிறது என்பதற்கான காட்சிகள் ஆகும்.**

'சாலைகள் என்பது போராட்டம் நடத்தும் இடமல்ல' என்று அமைச்சர் ராஜ்மோகன் சொல்லி இருக்கிறார். சாலையை மறித்து இதுவரை விஜய் பேசியது இல்லையா? அவரது ரசிகர்கள் எதுவும் செய்தது இல்லையா? 'மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தியதால் கைது' என்கிறார் அமைச்சர். மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் இவர்கள் நடப்பதே இல்லையா?

போராட்டம் நடத்துவதையே சட்ட விரோதம் ஆக்கிவிட்டது விஜய் அரசு. காவல் துறை எப்படி வேண்டுமானாலும் நடந்து கொள்ளலாம், அராஜகம் செய்யலாம் என்று அனுமதி கொடுத்து விட்டார் முதலமைச்சர் விஜய். 'நான் நினைத்ததைச் செய்வேன், அதை யாரும் கேட்க முடியாது, கேட்கக் கூடாது' என்பதுதான் இன்று நடந்துள்ள மாற்றம்.




மருத்துவக் கல்விக்கான தகுதித் தேர்வான நீட் தேர்வை ரத்து செய்ய வலியுறுத்தி, தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று முன்தினம் போராட்டம் நடைபெற்றது. இந்தப் போராட்டத்தில் தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்று, நீட் தேர்வுக்கு எதிரான பதாகைகளை கைகளில் ஏந்தியவாறு தங்களது எதிர்ப்பை பதிவு செய்தனர்.

### 'நீட்'டுக்கு எதிராக புதுடெல்லியில்

# மாணவர்கள் போராட்டம்; தி.மு.க. ஆதரவு!

## கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்,பி, நேரில் சென்று தெரிவித்தார்!

**புதுடெல்லி, ஜூலை 25 -**

**டெல்லி ஜந்தர் மந்தரில் நீட் தேர்வுக்கு எதிராக போராடி வரும் மாணவர்களுக்கு, தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. நேரில் சென்று தனது ஆதரவைத் தெரிவித்தார்.**

அப்போது பேசிய அவர், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும், எங்களுடைய தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் சார்பிலும், தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இளைஞர்களின் இந்தப் போராட்டத்தில் உறுதியோடு துணை நிற்கிறோம். நாங்கள் மாணவர்களின் உரிமைக்காகவும், சமூக நீதிக்காகவும் தொடர்ந்து குரல் கொடுப்போம்.



டெல்லியில் நீட் தேர்வுக்கு எதிராக மாணவர்கள் முன்னெடுப்பில் நடந்த போராட்டத்தில் தி.மு.க. சார்பாக கனிமொழி கருணாநிதி எம்.பி நேரில் சென்று தனது ஆதரவை தெரிவித்தார். இந்நிலையில், கரப்பான்பூச்சி ஜனதா கட்சியின் தலைவரான அபிஜீத் தீபிக்கே நன்றி தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து, நீட் தேர்வு கொண்டு வரப்பட்ட காலம் முதலே, கிராமப்புற மாணவர்களுக்கு எதிரான இத் தேர்வை திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்த்து வருகிறது. மாணவர்களின் மருத்துவக் கனவுகளை சிதைக்கக்கூடிய நீட் தேர்வுக்கு எதிராக பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்ததோடு, நீதிமன்றத்தில் சட்டப் போராட்டங்களை தொடர்ந்து வருகிறோம்.

### உச்சநீதிமன்றத்தில் தி.மு.க. வழக்கு!

தி.மு.க. ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, நீட் தேர்விலிருந்து தமிழ்நாட்டிற்கு விலக்கு கோரி சட்ட மன்றத்தில் சட்ட மசோதா நிறைவேற்றப்பட்டது. ஆனால், ஆளுநர் அதற்கு ஒப்புதல் அளிக்காமல் நிராகரித்தார். தற்போது, குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்ட மசோதாவுக்கும் இதுவரை ஒப்புதல் கிடைக்கவில்லை. இதனிடையே, நீட் தேர்வுக்கு எதிராக திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் உச்சநீதி மன்றத்திலும் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

எனவே, நீட் தேர்வுக்கு எதிரான போராட்டம் என்பது திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு புதிதானது அல்ல. மாணவர்களின் உரிமைக்காகவும், சமூகநீதிக்காகவும் தி.மு.க. உறுதியுடன் நீட் தேர்வை எதிர்த்து போராடி வருகிறது.

நாடு முழுவதும் உள்ள இளைஞர்கள், நீட் தேர்வு தங்களுக்கு எதிரானது என்பதை உணர்ந்து, அதற்கு எதிராகப் போராடி வருகின்றனர். எனவே, திராவிட முன்னேற்றக் கழகமும், எங்களுடைய தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினும் மாணவர்களோடு என்றும் துணை நிற்போம் என்பதைத் தெரிவிக்கும் வகையில், இப்போராட்டத்தில் நாங்களும் பங்கேற்றுள்ளோம்.

தமிழ்நாடு எப்போதெல்லாம் ஒரு முக்கியமான கருத்தை முன் வைக்கிறதோ, அது தமிழ்நாட்டிற்கு மட்டுமே தொடர்புடைய பிரச்சினையாகப் பார்க்கப்படுகிறது. ஆனால், தமிழ்நாடு தொடர்ந்து வலியுறுத்தி வரும் பல்வேறு கருத்துகள் மற்றும் கோரிக்கைகள், நாடு முழுவதும் உள்ள இளைஞர்கள் மற்றும் மாணவர்களின் எதிர்காலத்தையும் உரிமைகளையும் பாதிக்கக்கூடியவை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அந்த வகையில், நீட் தேர்வுக்கு எதிரான போராட்டமும் தமிழ்நாட்டைத் தாண்டி, நாடு முழுவதும் உள்ள மாணவர்களின் நலனுக்கான போராட்டமாக மாறியுள்ளது.

ஒரு கட்டத்தில், ஒரு பிரச்சினை நாட்டின் எதிர்காலத்திற்கு எவ்வளவு முக்கியமானது என்பதை மக்கள் உணர்ந்து கொள்ளும் காலம் வரும். அப்போது அதன் உண்மைத் தன்மையையும் முக்கியத்துவத்தையும் அனைவரும் புரிந்து கொள்வார்கள். நீட் தேர்வுக்கு எதிரான இந்தப் போராட்டத்தை நாங்கள் தொடங்கியிருந்தாலும், இதன் பாதிப்பை உணர்ந்து யார் போராட முன்வந்தாலும், அவர்களோடு நின்று ஆதரிக்க திராவிட முன்னேற்றக் கழகம் எப்போதும் தயாராக இருக்கிறது.

மேலும், மாணவர்கள் மீது மிகப்பெரிய அளவில் வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டதை நம் அனைவரும் பார்த்தோம். மாணவர்கள் மீது அக்கறையும் அன்பும் கொண்டவர்கள் ஒருபோதும் வன்முறையை கட்டவிழ்த்து விடமாட்டார்கள். மாணவர்களின் குரலைக் கேட்டு, அவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு, அவர்களது உரிமைகளுக்கு மதிப்பளிப்பதுதான் பொறுப்புள்ள அரசின் அணுகுமுறையாக இருக்க வேண்டும்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. கூறினார்.

# நீட் விவகாரத்தில் நாடே பற்றி எரிகிறது - சினிமா கொண்டாட்டத்தில் த.வெ.க. அரசு!

## ஒட்டுமொத்த தமிழ்நாடு அமைச்சரவையும் திரையரங்குகளில் அமர்ந்திருந்த அவலம்!

சென்னை, ஜூலை 25 -

நீட் விவகாரத்தில் நாடே பற்றி எரிந்து கொண்டிருக்கும் நிலையில், த.வெ.க.வினரோ சினிமா கொண்டாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். சபாநாயகர் முதல் ஒட்டுமொத்த த.வெ.க. அமைச்சர்களும் திரையரங்குகளில் ஜனநாயகன் திரைப்படத்தை பார்த்து கொண்டிருக்கின்றனர்.

தமிழ்நாட்டில் த.வெ.க. ஆட்சி அமைந்தது முதல் எண்ணற்ற இன்னல்களை மக்கள் சந்தித்து வருகின்றனர். மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு சந்தி சிரிக்கிறது. தொடர் மின்வெட்டால் மக்கள் தூக்கத்தை தொலைத்துள்ளனர். மாநிலம் முழுவதும் த.வெ.க. அரசுக்கு எதிராக பல்வேறு தரப்பினரும் போராட்டம் நடத்தி வருகின்றனர். இதேபோல், நீட் தேர்வு விவகாரத்தில் தமிழ்நாடு உட்பட நாடு முழுவதும் மாணவர் போராட்டம் வெடித்துள்ளது.

இவை எதுகுறித்தும் கவலைப்படாமல், த.வெ.க. ஆட்சியாளர்கள் ஜனநாயகன் திரைப்பட கொண்டாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். விஜயின் ஜனநாயகன் திரைப்படம் வெளியாகியுள்ள நிலையில் ஒட்டுமொத்த தமிழ்நாடு அமைச்சரவையும் திரையரங்கில் அமர்ந்துள்ளது.

சபாநாயகர் முதல் அனைத்து அமைச்சர்களும் திரையரங்கில் அமர்ந்து ஜனநாயகன் திரைப்படத்தை பார்த்துக் கொண்டிருக்கின்றனர். மக்களின் சேவைக்கு வந்துவிட்டு திரை யரங்கில் விஜயின் ஜனநாயகன் படத்தை பார்த்து கொண்டிருப்பதாக பல்வேறு தரப்பினரும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

சபாநாயகர் மற்றும் த.வெ.க. அமைச்சர்களின் பொறுப்பற்ற செயல்களுக்கு பொதுமக்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர். ஆட்சி அதிகாரத்தில் அமர்ந்து கொண்டு மக்கள் சேவை செய்யாமல் திரையரங்கில் ஒட்டுமொத்த அமைச்சரவையும் படம் பார்ப்பதா என அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

### வெட்கக் கேடானது!

அரசு நிர்வாகமும், அமைச்சர்களும், ரசிகர் மன்ற நிர்வாகிகளாக ஜனநாயகன் திரைப்பட கொண்டாட்டத்தில் மும்முரம் காட்டுவது வெட்கக் கேடானது என்று விமர்சனம் எழுந்துள்ளது. ஆட்சியை நடத்த சொன்னால் சினிமா காட்சியில் ஆர்வம் காட்டி வருவதாக முதலமைச்சர் விஜய் மற்றும் அமைச்சர்களுக்கும், த.வெ.க.வினருக்கும் நெட்டின்சன்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.